Regd. M. No. 4565

# தமிழ் மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

(TAMIL SIDDHA MEDICAL MAGAZINE)

மலர் 4 | ஜூலை 1944 | இதழ் 7.

ஆசிரியர் :

தமிழ்ப் பண்டிதரும், மருத்துவ பண்டிதருமான

மாங்காடு. வடிவேலு முதலியார்.

உரிமையாளர் :

காரியக்கமிட்டியார் : சித்த மாணவர் கழகம்.
கவர்ன்மெண்ட் இந்திய மருத்துவ பாடசாலை

கீழ்ப்பாக்கம், மதராஸ்.

Printed by P. Govindaraja Pillay at the Rudisill Press,
No. 7, Nallanna Mudaly Street, Royapettah
and Published by C. M. Raja Jegatheesan,
at Govt. School of Indian Medicine, "Hyde Park"
Poonamallee High Road, Kilpauk, Madras

## தி நியோ ரெமடீஸ் மானுபேக்சரிங் கம்பெனி

ராமச்சந்திரபுரம், புதுக்கோட்டை ஸ்டேட்,

—:: தென் இந்தியா. ::—

## NEO-GRIPE

**நியோ-கிரைப்** குழந்தைகள் வன்மையுடனும் நோய் அணுகாமலும் இருப்பதற்கு இது ஒரு முக்கிய ஔஷதமாகும். குழந்தைகளுக்கு ஏற்படும் குடல் சம்பந்தமான வயிற்று வலி, புளிப்பு வாந்தி, அசீரணம், வயறு உப்பிசம் போன்ற வியாதிகளுக்கு இது கை கண்ட மருந்தாம். குழந்தைகள் இருக்கும் ஒவ்வொரு வீட்டிலும் இது இருக்கவேண்டியது மிகவும் அவசியம். குழந்தைகளுக்கென பக்குவமான முறையில் உயர்தர மருந்துகளினால் செய்யப்பட்டது.

## NEO-PHLOGESTINE

**நியோ-பிளாஜிஸ்டின்** இது நிமோணியா முதலிய சுவாசாசய ரோகங்கட்கும், கட்டி, பிளவை, சூலை முதலிய வீக்கங்கட்கும் மேல் பூச்சாக பூச விரைவில் குணம் அளிக்கும் பக்குவமான முறையில் உயர்ந்த ஔஷதங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது.

## BABA'S-CURE

**பாபாஸ்-க்யூர்** இருமல், இளைப்பு. சுவாசகாசம் (Asthma) முதலிய ரோகங்களுக்கு இதை நெருப்பிலிட்டு புகை பிடிக்க தொந்திரவு நீங்கி, உடனே சுகம் காணலாம். இது கைதேர்ந்த முறையில் செய்யப்பட்டுள்ளது.

(இம்மருந்துகள் எல்லா மருந்துகடைகளிலும் கிடைக்கும்.)

# தமிழ் மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

மலர் 4 ஜூலை 1944 இதழ் 7

## இலிங்கம்

### (ஜாதிலிங்கம்)

Dr. R. தியாகராஜன், L.I.M.

இப்பொருள் ஆண்குறி, இங்குலிகம், இராசம், கடைவன்னிக் கர்ப்பம், கலிக்கம், காஞ்சனம், காரணம், சண்டகம், சமரசம், சாணியம், செந்தூரம், மணிராகம், மிலேச்சம், வனி, வன்னி என்ற வேறு பெயர்களினுலும் வழங்கப்படுகின்றது.

சிவன் திரிபுரத்தை எரித்த காலத்து நெற்றிக்கண்ணின் பொரி இரசமிருக்கின்ற பூமியில் பட்டு இலிங்க பாஷாணமாயிற்று என்றும், அது மேருவுக்குக் கிழக்கே வங்கமிருக்கின்ற மலையின் அடியில் இரசமும் கெந்தியும் கட்டி உண்டாயிற்றென்றும் பிறப்பு வரலாறு கூறப்பட்டுள்ளது. தற்காலம் நம்மால் கையாளப்பட்டு வருவது வைப்புப் பாஷாணங்களின் கீழ்க் கூறப்பட்ட ஜாதிலிங்க பாஷாணம் என்று மேற் கூறிய வரலாற்றால் தெளியலாம்.

### செய்முறை

சுத்தித்த ரசம் பலம் 8, கந்தகம் பலம் 2, வெடியுப்பு பலம் 2, எடுத்துச் சூதத்தைக் கந்தகத்தால் வறுத்து வெடியுப்பைக் கலந்து காசிக் குப்பியிலடைத்து வாலுகையிலிட்டு ஆறுசாமம் எரித்து, ஆறவிட்டு, உயர் கம்பிலிங்கத்தை எடுத்துக் கொள்ளவும்.

### குணம்

இதற்குப் பளுத்தன்மையும், நெருப்பிலிடப் புகையுந்தன்மையும், நீரில் கரையாத் தன்மையும் உண்டு. வாசனையும் உருசியும் கிடையாது. வன்னிகர்ப்பம் என்ற இதன் பெயர், நெருப்பின் நிறத்தையும், வெப்ப வீரியத்தையும் உடையது என்று விளக்குவிக்கும். இலிங்கத்திற்கு வியாதாபேதகாரிச் செய்கை உண்டென்று கூறுவர். இதன் பொதுக்குணத்தைக் கீழ்ச் செய்யுள்களாலும் உணர்க.

பேதிசுரஞ் சந்நி பெருவிரண நீரோடுநே
காதகடி காசங் கரப்பான்புண்—ணோத
வுருவிலிங் கசங்கதமா யூறுகட்டி யும்போங்
குருவிலிங்க சங்கமதைக் கொள்.

ஆதி யிரதவுருக் காதலாற் சாதிலிங்க
மோதி லிரதகுண முற்றுடலிற்—றீதுபுரி
குட்டங் கிரந்தி கொடுஞ்சூலை வாதமுத
லுட்டங்கு நோய்களையோட் டும்.

(இ-ள்) தோற்றத்தில் பாதரச உருக்காகிய செவந்த நிறத்தை யுடைய சாதிலிங்கமும் அதுசேர்ந்த மற்றைய மருந்துகளும் அந்த இரச குணத்தைக்கொண்டு துன்பத்தை யுண்டுபண்ணுகின்ற பேதி, சுரம், சந்நிபாதம், நீராப்புண்கள், அதிமூத்திரம், காணுக் கடிவிடம், காசம், கரப்பான், சிரங்கு, சொல்வதற்கும் பார்வைக்கும் வெறுப் பாய்த் தோன்றி பரவுநுணுக் காய்க்கிரந்தி, குட்டம், கிரந்தி, கொடு மை செய்கின்ற சூலை, வாதநோய் முதலியவைகளையும் நீக்கும் என்றவாறு.

வேறொருநூற்றலைவர் இதன் குணத்தைக் கீழ்க் கண்டவாறு கூறுகின்றார்.

"[1]நிலத்தி லெழுந்தபிணி நீங்காக் கிரந்தி
[2]சலத்துடனே சூலைவெடி தானகற்றும்—பலத்த
சாதிலிங்கத் தின்குணத்தைச் சாற்றினேன் சன்னிமுதல்
ஓதுசுரம் போமே ஒளிந்து."

மற்றும், சரக்குகளுக்கெல்லாம் இலிங்கம் இறையென்றும், மேக நோய்களுக்கு நமன் போன்றதென்றும் புகன்றிருப்பதை,

"இங்குலிகச் சரக்கொன்றே சரக்குக்கெல்லா மிறையாகும்"

"மேகவகை வினைக்கு நமனான லிங்கம்" என்ற வடிகளால் உணர்க.

தேரன் மருத்துப்பாரதத்தில் அலறுசந்நிக்கு இலிங்கத்தின் ஆட்சி கூறப்பட்டிருக்கின்றது.

## சுத்தி முறைகள்

அழிஞ்சிற்பட்டை ஒரு வீசையை நறுக்கியிடித்து நான்குபடி புளித்த காடியில் போட்டு இரவு பனியில்வைத்து மறுநாள் காலை நன்றாய்ப் பிசைந்து, கலக்கியதில் ஒரு பலம் இலிங்கத்தைச் சீலையில்

---

[1]நிலத்திலெழுந்தபிணி - பிருதிவிபூத உருப்புகளில் உண்டாம் நோய்கள்.

[2]சலப்பிணி-அப்பு பூத உறுபபுகளில் உண்டாம் நோய்கள்.

கட்டியிட்டு, மேல்சட்டி மூடிச் சீலைமண்செய்து, உலர்த்திப் பிறகு பனியில் வைத்தெடுத்து, அடுப்பேற்றி விளக்குப்போல் நீர்வற்றும்படி எட்டுசாமம் எரித்து, எடுத்துத் துடைத்து முன்போலவே புளி கருணைச் சமூலம் கலந்த காடிநீர், நன்னாரிவேர் கலந்த காடிநீர் இவ்விரண்டிலும் தனித்தனியாக எரித்தெடுக்கச் சுத்தியாம். இதை,

"சொல்லக்கேள் புலத்தியனே மகனே யிந்தத்
 துறையான சாதிலிங்க சுத்திதானே
வெல்லக்கே ளழிஞ்சில் புளிங்கருணை யோடு
 மேலான நன்னாரி காடித்தண்ணீர்
புல்லக்கே ளதிலதிலோர் மூன்று வைகல்
 புகையாமல் விளக்கிலெரி யழுக்குநீங்கும்
வெல்லக்கே ளளவுதொடிக் கொன்றே வீசை
 வெறுந்தண்ணீர் நாலுபடி வீதமாமே." என்றும்,

"மேகப்பிணி முதல் போகவென்றால் மேலான லிங்கத்தைச் சுத்திசெய்ய
மாகத்தழிஞ்சி கருணை நாரிவாய்த்த புளித்த நீரொன்பதேநாள்
பாகத்தழலெரி தீவிகைபோற் பாம்புப் பிடகர்க்கைப்பண் பிதென
வேகத்தைநீக்கி யென்றுடாய் பாம்பே மேலாஞ்சரக்
 [கிதென்றுடாய் பாம்பே."
என்றும் புகன்றிருப்பதாலறிக.

வேறு

பழச்சாறு, பசுப்பால், மேனிச்சாறு இம்மூன்றையும் சமவெடை கூட்டி இலிங்கத்திற்குச் சுருக்கிட்டெடுக்கச் சுத்தியாம்.

வேறு

முலைப்பாலிலும், எலுமிச்சங்கனி இரசத்திலும் முறையே ஒவ்வொரு நாள் ஊறவைத்தெடுக்கச் சுத்தியாம். இதனை,

"முன்னுசாதி லிங்கந்தன்னை முலைப்பாலி லூறவைத்தே
பின்னரும் சம்பீரத்தின் பெருங்கனிச் சாற்றிற்சுத்தி"
என்ற வடிகளாலறிக.

அளவு

இதனைப் பத்து உழுந்தெடைவரை உள்ளுக்கும், புகைபோடுவதற்கு அரை வராகனெடையும் உபயோகிக்கலா மென்றும் பைஷஜ கல்பம் கூறுகின்றது.

பற்பம்

ஒருபலம் சுத்தித்த இலிங்கத்திற்குக் கீழ்ப்பட்டியில் குறிப்பிட்ட சாறுகளைக்கொண்டு முறைப்படி அரைத்து உலர்த்திப் புடமிட்டெடுக்கப் பற்பமாம். இப்பற்பம் இராமசரத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளது.

| சாற்றின் | அளவு | அரைப்பு | உலர்த்தும்நாள் | | புடம் |
|---|---|---|---|---|---|
| பெயர் | பலம் | நாள் | வில்லை | கவசம் | வரட்டி |
| சரக்கொன்றைச் சமூலச்சாறு | 4 | 4 | 3 | 1 | 32 |
| நாட்டெட்டிக் கனிசரம் | 4 | 4 | 3 | 1 | 30 |
| சுரபுன்னைச் சமூலச்சாறு | 4 | 4 | 3 | 1 | 32 |
| வாட்கோரைச் சமூலச்சாறு | 4 | 4 | 3 | 1 | 30 |
| திருவாத்திச் சமூலச்சாறு | 4 | 4 | 3 | 1 | 32 |
| நறுமாமரச் சமூலச்சாறு | 4 | 4 | 3 | 1 | 30 |
| பனைவேல்மரச் சமூலச்சாறு | 4 | 4 | 3 | 1 | 32 |
| கல்லால் சமூலச்சாறு | 4 | 4 | 3 | 1 | 30 |

பற்பத்தின் அளவு:—துவரையில் எட்டில் ஒருகூறு உத்தமமென்றும், இரண்டுகூறு மத்திமமென்றும், மூன்றுகூறு அதமமென்றும், நான்குகூறு அதமாதமமென்றும், ஐந்துகூறு ஒருபுடைத் துணிவென்றும், ஆறுகூறு முழுமைத் துணிவென்றும், எழுகூறு அனந்தமென்றும், முழுத்துவரையளவு அபரிமிதமென்றும் கண்டுகொள்க.

புசிக்க ஏற்ற நிலங்கள்:—குறிஞ்சி, நெய்தல் ஆகும் நிலங்களென்றும்; மருதம், முல்லை, பாலை ஆகாநிலங்களென்றும் கொள்க.

புசிக்க ஏற்ற திங்கள்:—கார்த்திகை, பங்குனி, சித்திரை, ஆவணி, ஐப்பசி ஆகுமென்றும், மற்றைய ஆகா.

துணைமருந்தும் தீரும் நோய்களும்

மூக்கிரட்டை வீக்க முளரிரணை மேகமுழை
மூக்கிரட்டை வீக்க முளரிவனி—மூக்கிரட்டை
யாம்பலரி யாலளை பாலைபுல் குளம்நெய்
யாம்பலரி யாலளைநெய் யார்.

(சொ-ரை) மூக்கிரட்டை—வாத, பித்த, கப சுவாசகாசம்; வீக்கம்-வாத, பித்த, கப நீர்க்கட்டு; முளரி-வாத, பித்த, கப சுரம்; ரணம்-வாத, பித்த, கபரணம்; மேகம்-வாத, பித்த, கபமேகம்; உழை-வாத, பித்த, கபக்குழப்பம்; மூக்கு-வாத, பித்த, கபமூக்கல்; இரட்டை-வாத, பித்த, கபப்பிடிப்பு; வீக்கம்-வாத, பித்த, கபவீக்கம்; முள-வாத, பித்த, கபச்சொரி; அரி-வாத, பித்த, கபக்குன்மம்; வனி-வாத, பித்த, கபச்சன்னி; (இப்படியாகக் கூறிய நோய்வகை விரியால் முப்பத்தாறுக்கும் துணைமருந்துகள்) மூக்கிரட்டை-மூக்கிரட்டை, இரட்டைப் பிரமட்டை; ஆம்பல்-அல்லி, கள்; அரி-கடுக்காய், தான்றிக்காய்; ஆல்-குருவியால், கல்லால்; அளை-தயிர், மோர்; பால்-முலைப்பால், பசுப்பால்; ஐ-வெண்ணெய், சர்க்கரை; புல்-கற்கண்டு, பனைவெட்டு; குளம்-வெல்லம், கருப்பஞ்சாறு; நெய்-பசுநெய், தேங்காயெண்ணெய்; ஆம்-இளநீர், பன்னீர்; பல-துளசி, உருத்திரசடை; அரி-நெல்லி, கீழ்க்காய் நெல்லி; ஆல்-பொன்னுங்காணி, கரிசலாங்காணி; அள-வரள்முள்ளி, நீர்முள்ளி; ஐ-தும்பை, சாமந்தி; நெய்-கொட்டி, நெய்தல்; ஆர்-வெந்நீர், தண்ணீர் (ஆகிய முப்பத்தாறு சரக்குகளும் முறையே ஆகும்) என்றவாறு. (தொடரும்)

# சர்க்கார் சிவில் சர்வீஸில் ஏற்பட்ட குறைவை நீக்க ஓர் சிறந்த யோசனை.

——X——

சென்னை இராஜதானியில் சர்க்கார் இலாகாவில் தேவையான அளவு வைத்தியர்கள் இல்லாமையால் ஏற்பட்டுள்ள குறைவைத் தீர்ப்பதற்காகச் சர்ஜன் ஜனரலும், சென்னை இராஜதானி மேனாட்டு வைத்தியக் கல்லூரிகளின் தலைவர்களும், மற்றும் சில பெரிய வைத்தியர்களும் கூடி ஆலோசித்தனர். அச்சமயம் அவர்கள் சில விஷயங்களைப்பற்றி ஆராய்ந்ததாக ஜூலை 14௳ காலை வெளிவந்த தின வெளியீடுகளில் கண்டோம். அவையாவன:—

1. ஒரு புது மருத்துவ கல்லூரியை மதுரையில் நிறுவுதல்.

2. வேண்டாம் என்று மூடிய எல். எம். பி. வைத்தியப் பள்ளியை மறுபடியும் தொடங்கல்.

3. கல்லூரிகளில் அதிகமாக மாணவர்களைச் சேர்ப்பதற்கு வசதிகளை ஏற்படுத்தல்.

4. வேலை கட்டாயமாகக் கொடுக்கப்படும் என்று கூறி இரண்டாண்டுகள் பயிற்சி அளித்து, பழைய காலத்து (Hospital Assistants) ஆஸ்பிட்டல் அசிஸ்டண்டுகளுக்கு ஒப்பத் தயாரித்தல் முதலியன.

இவ்வழிகளின் பலாபலன்களை இங்கு ஆராய்வாம். இவ்வழிகளின்படி இரண்டு மூன்று கல்லூரிகளை ஏககாலத்தில் தொடங்கப் போதுமான வசதிகளும், ஆசிரியர்களும், இப்போர்ச் சமயத்தில் கிடைப்பது கடினம். ஆகையால் ஒரே ஒரு புது கல்லூரியை மட்டும் தொடங்கவும், பழைய கல்லூரிகளில் அதிகமாக மாணவர்களைச் சேர்க்கவும் வசதிகளைச் செய்யலாம். அங்ஙனம் செய்வதற்கும் அதிக சிரமப்படவேண்டும். அவ்வளவு கஷ்டப்பட்டுச் செய்தாலும் ஆண்டு ஒன்றுக்கு நூறு வைத்தியர்களைத்தான் தயாரிக்கக் கூடும். முதல் மூன்று வழிகளைக் கையாண்டால் வைத்தியர்களை உற்பத்தி செய்யக் குறைந்தது ஐந்து ஆண்டுகள் வேண்டும். ஆகையால் முதல் ஐந்து ஆண்டுகள் வரைக்கும் இப்போது ஏற்பட்டுள்ள இடுக்கண் சிறிதளவும் நீங்க வழியில்லை. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகும் ஆண்டு ஒன்றுக்கு நூறு வைத்தியர்களை அதிகப்படி வெளிவரக் கூடுமாகையால் இவ்விடுக்கண் தீர மற்றும் சில ஆண்டுகள் செல்லவேண்டும். ஆகையால் முதல் மூன்று வழிகளினாலும் ஐந்தாண்டுகளுக்குள் ஒரு பலனும் கிடைக்காதென்று சொல்லாமலே விளங்கும். ஆனால் நான்காவது முறையைக் கையாண்டால் இரண்

டாம் ஆண்டின் இறுதியில் நூறு வைத்தியர்களை தயார் செய்யலாம். ஆனால் அவர்களுக்கு மருத்துவக் கல்வியும், பயிற்சியும், பழக்கமும் தக்க அளவு அளிக்க முடியாது. இக்குறைந்தவகை வைத்தியர்களைத் தயாரிக்கப் பெரியோர்கள் எண்ணியது எமக்கு அதி வியப்பைத் தருகின்றது. இதைவிடச் சிறந்த வழி ஒன்று தோன்றுகிறது. இதை அப்பெரியார்கள் யோசிப்பார்களாக. இவ்வழி என்னவெனில் ஐந்து ஆண்டுகள் கல்வியும், பயிற்சியும், பழக்கமும் பெற்றுத் தேர்ந்து பல ஆண்டுகளாக மருத்துவம் செய்துவரும் எல். ஐ. எம். களைச் சர்க்கார் சிவில் இலாகாவில் சேர்த்து, அங்குள்ள குறைகளை நீக்குவதாம். பதினேழு ஆண்டுகளாக எல். ஐ. எம்.களின் பொது சேவையைப் பொதுமக்கள் பாராட்டுகின்றனர். இரண்டாண்டில் தயாரிக்கப்போகும் வைத்தியர்களைவிட எல். ஐ. எம்.கள் பன்மடங்கு உயர்ந்தவர்களாவார். எல். எம். பி. களுக்குள்ள கல்வியும் தேர்ச்சியும் இவர்களுக்கு உண்டு. வைத்தியர்களுக்கு முக்கியமாக வேண்டியது மருத்துவப் பயிற்சியும், பழக்கமுமாம். இவ்விரண்டும் அவர்களுக்கு அதிகம் உள்ளன. இதை அப்பெரியார்களும் சர்க்காரும் கவனிப்பார்களாக.

இதுகாறும் எல். ஐ. எம். களைப் பழித்தோ அல்லது குறை கூறியோ வந்தவர்கள் அவர்களை ஏற்றுக்கொள்ள உடனே சம்மதியார்கள். அதற்கும் ஒரு வழியை நாம் கூறுவாம். வேலையும், அதிக சம்பளமும் எல். எம். பி. களுக்கு உள்ளதைப்போல் கட்டாயமாகக் கொடுப்பதாக வாக்களித்து, மூன்று அல்லது ஆறு மாதங்கள் பயிற்சி அளித்து எல் ஐ எம். களைச் சர்க்கார் சிவில் இலாகாவில் சேர்த்துக் கொள்ளலாம். இங்ஙனம் செய்தால் இப்போதுள்ள இடுக்கண் உடனே தீருவதுடன், பல ஆண்டுகள் பயிற்சியுள்ள தேர்ந்த வைத்தியர்களைப் பெறுவதுமாகும்.

எங்கு குறைந்த அளவு பயிற்சிபெற்ற வைத்தியர்களை உற்பத்தி செய்து மக்களுக்கு அதிக ஆபத்தை விளைவித்து விடுவார்களோ என்று பயந்தும் வைத்தியர்கள் இல்லாது படும் அவஸ்தையைப் பார்த்தும் நாம் இவ்வழியைக் கூறுகிறோம். இதைச் சர்க்கார் ஏற்றுக்கொள்ளும்படி நாம் கேட்டுக் கொள்ளுகிறோம்.